Date : 27.07.2026

வா.சா.1 : மீரா பாய்

<u>வா.சா. 1 மீண்டும் அழைக்கப்பட்டு 1 முதல் 9 மற்றும் 11 முதல் 24 , 26, 28 முதல் 42, 45 முதல் 47 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனக்கு எழுதப்படிக்க நன்கு தெரியும் என்றால் ஓரளவு தெரியும். என் அப்பா எனக்கு பிரித்து கொடுத்த சொத்தை பாகபிரிவினை கேட்டு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்துக்கள் மூலைக்கரைப்பட்டி கரிசல்காட்டில் அமைந்துள்ளது. சொத்தின் புலஎண் விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் ஆனால் தற்போது சொல்லமுடியாது. மொத்த வழக்கு சொத்தில் 1/4 பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மொத்த சொத்தில் 1/2 பங்கு பிரித்து வழக்கு தாக்கல் செய்துளளேன் என்றால் சரிதான். என் தகப்பனார் எழுதி கொடுத்த வா.சா.ஆ-1 செட்டில்மெண்ட் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் தகப்பானார் எழுதி கொடுத்த செட்டில் மெண்ட் ஆவணத்தை தவிர வழக்கு சொத்துக்கு இந்த ஆவணத்தை தவிர வேறு ஆவணம் இல்லை என்றால் சரிதான். வா.சா-ஆ 1 ஆவணத்தில் தாவா சொத்தை தவிர பாப்பான் குளம் கிராமத்தில் உள்ள சொத்தும் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்துக்களை இந்த வழக்கில் நான் சேர்க்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-1 ஆவணத்தில் 1ம் தபசிலாக சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் எல்லாம் மூலைக்கரைப்பட்டியில் உள்ள சொத்துக்கள் என்றால் சரிதான். வா-சாஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து புலஎண்களிலும் கூடுதல் விஸ்தீரணமாக 25 ஏக்கர் 94 செண்டு பிரிவின்றி 1/4 பாகத்தை பொறுத்து எனது தகப்பனார் செட்டில் மெண்ட் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். தபசில் சொத்தான 1வது அட்டவணை சர்வே எண்ணில் 2298/1 எனது செட்டில் மெண்ட் ஆவணத்தில் உள்ளதா என்று சொன்னால் எனக்கு அது பற்றி தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள 1வது தபசில் அட்டவணையில் உள்ள 1 முதல் 3, 4, 5, 8, 9, 11 முதல் 15, 21 முதல் 23, 26 மற்றும் 27 அயிட்ட சொத்துக்கள் எனது தகப்பனார் எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் இல்லை என்றால் சரியல்ல உள்ளது. பிராது தபசில் சொத்துக்களுக்கு எனது தகப்பனார் பெயரிலோ அல்லது எனது பெயரிலோ உள்ள பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணம்தான் உள்ளது பட்டா இல்லை. எனது அப்பாவுக்கு வழக்கு சொத்து

எவ்வாறு பாத்தியம் என்றால் பாகபிரிவினையில் படி பாத்தியப்பட்டது. மேற்படி பாகபிரிவினை ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்துக்கள் அனைத்தும் எனது தகப்பனார் சுப்பாராயர் ரெட்டியார் எனது சித்தப்பா இராமகிருஷ்ண ரெட்டியார் , எனது தாத்தா இராமபத்திர ரெட்டியார் மற்றும் எனது பெரியதாத்தா சுப்பாராய ரெட்டியார் ஆகிய நான்கு பேர்களும் சேர்ந்து ஏற்படுத்திக்கொண்ட பாகபிரிவினை அடிப்படையில் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது. எனது தகப்பனாருக்கு பாகபிரினை மூலம் 1/4 தான் பாத்தியம் என்ற நிலையில் நான் வழக்கில் 1/2 பாகம் கேட்டுள்ளது தவறானது என்றால் நான் 1/4 பங்குதான் கேட்கிறேன். மேற்படி அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள 27 சொத்துக்களும் உட் பிரிவு ஏற்பட்டு மற்றவர்கள் பெயரில் தனிப்பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் ஏற்பட்டிருக்கலாம் சரியாக தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் 15 மற்றும் 16 வது அயிட்ட சொத்திற்கு மனை எண்.394 என ஒரே எண் பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிராதில் 1 வது தபசில் அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள 1 முதல் 27 அயிட்ட சொத்துக்களைதான் மனைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அந்த சொத்துக்களைதான் பிராதில் 2 முதல் 46 சொத்துக்களாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராதில் சொல்லப்பட்டுளள 26 வது தபசில் சொத்தில் சர்வே எண்.2315/8B2 என தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நினைவில்லை. அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள 1 முதல் 27 அயிட்ட சொத்துக்களில் 1/2 பாகமும் அது மனைகளாக பிரிக்கப்பட்டுள்ள 2 முதல் 46 அயிட்ட சொத்துக்களிலும் 1/2 பாகம் தான் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கில் குறிப்பிட்டுள்ள சந்தான கிருஷ்ணன் என்க்கு சகோதரர் ஆவார். அவர் வேலப்பனுக்கு கிரையம் கொடுத்துள்ளதில் அவரை நான் வழக்கில் கட்சி சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்த நேரத்தில் அவருக்கு சொத்து இல்லை. ஆனால் சொத்தின் முந்தைய ஆவணம் வேலப்பன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தை பொறுத்து இந்த வழக்கில் பரிகாரம் எதுவும் நான் கேட்கவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனாரின் மூத்த தாரத்தின் வாரிசுகள் இந்திரா, சுப்புலெட்சுமி, இராஜகுமாரி, தமயேந்தி, வனஜா மற்றும் சந்தான கிருஷ்ணன் ஆகியோர்கள் ஆவார்கள். மேற்படி பெண் வாரிசுகள் அனைவரும் சேர்ந்து சந்தான கிருஷ்ணனுக்கு தாவா சொத்துக்களை பொறுத்து விடுதலை கொடுத்துள்ளார்கள்.

மேற்படி விடுதலை ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை. மேற்படி வேலப்பன் உயிருடன் இல்லை என்று நான் கேள்விபட்டேன். மேற்படி வேலப்பனின் வாரிசுகள் அனைவரும் சேர்ந்து ஆறுமுகத்தம்மாளுக்கு விடுதலை கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி ஆறுமுகத்தம்மாள் வேலப்பனின் மனைவி என்றால் சரிதான். ஆறுமுகத்தம்மாள் பெயரில் உள்ள விடுதலை ஆவணத்தை நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும் பொழுது ஆறுமுகத்தம்மாளுக்கு உரிமை இல்லை. ஆறுமுகத்தம்மாளின் பவர் ஏஜெண்ட் நிலைமையில் வினோத் என்பவர் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார். நான் சொல்வது தவறு என்றும் முருகன் என்பவருக்குத்தான் கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்குத்தான் கொடுத்தார். ஆறுமுகத்தம்மாள் பொது அதிகார முகவர் மூலம் 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சரியாக நியாபகம் இல்லை. மேற்படி ஆவணத்தை பொறுத்தும் நான் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. அவரையும் சேர்த்துதான் 47 நபர்கள் மீது வழக்கு பதிவு செய்துள்ளேன். வழக்கு சொத்துக்கள் அனைத்தையும் Sun city என்ற பெயரில் மனை பிரிவுகளாக பிரித்து விற்பனை செய்துவிட்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு விற்பனை செய்தது 2011 ல் தெரியும் என்றால் 2015 ல்தான் தெரியும். வழக்கின் 1பிரதிவாதி வள்ளியூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.89/2012 என்ற வழக்கினை எனக்கு எதிராக தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் வழக்கறிஞர் மூலம் நான் ஆஜர் ஆனேன் என்றால் சரிதான். என் தரப்பில் நான் எதிருரை தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்துக்கள் அனைத்தும் 2011 ம் வருடம் மனைபிரிவுகளாக பிரிக்கப்பட்ட விவரம் எனக்கு 2012 ம் வருடம் 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த அசல் வழக்கு மூலமே தெரியும் என்றால் சரியல்ல. 2015 ல்தான் தெரியும். வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் என் தகப்பனார் கொடுத்த பிரிவில்லாத சொத்தினை பொறுத்து எனது தகப்பனார் காலம் சென்ற பின்னர் பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாகபிரிவினை யார் யாருக்கு இடையே ஏற்பட்டது என்றால் 1ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள ஆவணத்தில் தெரியும். வா.சா.ஆ-1 ஆவணத்தில் 1/4 பாகம் போக மீதம் உள்ள 3/4 சொத்துக்கள் யார் யாருக்கு உரிமை என்றால் சுப்பாராய ரெட்டியாருக்கு 1/2 பாகமும், என் சித்தப்பா இராமகிருஷ்ண ரெட்டியாருக்கு 1/4 பாகமும் உரிமையாகும். மேற்படி எனது சித்தப்பா மற்றும் சுப்பாராய ரெட்டியார்

ஆகியோர் இந்த வழக்கில் இல்லை என்றால் சரிதான். மேற்படி 3/4 பங்கு உரிமையாளர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கு சொத்து ஆவணங்களை பொறுத்து வேலப்பன், ஆறுமும் மற்றும் முருகன் ஆகியோர்களை வழக்கில் அவசிய தரப்பினர்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ-1 செட்டில் மெண்ட் ஆவணத்தில் உள்ள மற்ற சொத்துக்களையும் பொறுத்து பாகபிரிவினை கோராததால் இவ்வழக்கு பகுதி பாகபிரிவினை தோஷத்தால் பாதிப்படைந்துள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் முந்தைய ஆவணங்கள் 2012 லேயே தெரியும் என்பதால் நான் காலம் கடந்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்தில் 1 அயிட்டத்தில் உள்ள 1 தபசில் சொத்து, 15, 26, 39 அயிட்ட சொத்து விவரங்கள் விவரித்துள்ளது தவறு என்பதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. பிராதில் 1 தபசில் 4 வது அயிட்ட சொத்து புல எண்.2299/1 என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வில்லங்க சான்று மேற்படி புல எண்ணுக்குரியது என்றால் சரிதான். வழக்கிற்கு எனக்கு வியாஜித மூலம் கிடையாது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரனை பி.சா.10 ,27 தரப்பு ஒத்திவைக்கப்படுகிறது.**